

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி, வாரச்சந்தையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், காங்கேயம் நகர்மன்றத் தலைவர் சூர்யபிரகஷ் உள்பட நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் திறந்து வைத்தார்!

# குன்னம் தொகுதியில் புதிய அரசு போக்குவரத்துப் பணிமனை!

## சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன் - சொ.க.கண்ணன் - கு.சின்னப்பா - மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு!

பெரம்பலூர், மார்ச்,18-

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மானிய கோரிக்கையில் அறிவித்தபடி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) திருச்சி மண்டல இயக்கப் பகுதியில் உள்ள பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்களுக்கு கூடுதலாக பேருந்து வசதி செய்யும் வகையில், குன்னத்தில் புதிய அரசுப் பேருந்து பணிமனையினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் போக்குவரத்து துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, தலைமையில் திறந்து வைத்தார். கும்பகோணம் கோட்டத்தில் முதல் பெண் ஓட்டுநருக்கு அரசுப்பணிக்கான நியமன ஆணையை அமைச்சர் வழங்கினார்.

இதில் போக்குவரத்துத் துறை அமைச்சர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு சிறப்பான வாய்ப்பினை வழங்கியுள்ளார்கள். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு தொகுதிகளிலும் பணிமனை அமையாமல் உள்ளது. இன்னும் சில பெரிய தொகுதிகளில் பணிமனை கூடுதலாக வேண்டும் என்ற கோரிக்கை நிலுவையில் உள்ளது. ஆனால் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு இந்த தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான வாய்ப்பை வழங்கியுள்ளார்கள்.

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் மிக முக்கியமான பத்து கோரிக்கைகள் சேகரிக்கப்பட்டு அதில் மிக முக்கியமான கோரிக்கைகள் மிக விரைவில் நிறைவேற்றப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். குன்னம் சட்டமன்ற தொகுதியை பொறுத்தவரை முதன்மை கோரிக்கையாக புதிய பேருந்து பணிமனை வேண்டும் என கேட்கப்பட்டது. இந்த பணிமனை அமைந்தால் குன்னம் சட்டமன்ற தொகுதியில் இருக்கும் குக்கிராமங்களுக்கும் பேருந்து வசதி பரவலாக கொண்டு சேர்க்க முடியும். ஒரு சில கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் இருந்தாலும் பள்ளி கல்லூரி பயிலும் மாணவர்கள் சென்று வருவதற்கு கூடுதலாக பேருந்துகளை இயக்க இயலும். குன்னம் பகுதி மக்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள வாய்ப்பு தான் இந்த புதிய பேருந்து பணிமனை.

இரண்டாவது முக்கிய கோரிக்கையாக இந்த பகுதியில் மக்காச்சோளத்தின் விலை குறைவாக இருப்பதால் அதன் மதிப்பு கூட்டப்பட்டு விற்பனை செய்யும் வகையில் இந்த ஆண்டே தொழில் நிறுவனம் அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். மேலும் கூட்டுக் குடிநீர் திட்டம் தேவை என்ற கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் அடிப்படை பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாய்ப்பு கொடுத்துள்ள தால் தான் இது போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெறுகிறது. இந்தப் பேருந்து பணிமனை அமைப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்பாக திட்டமிட்டு இன்று திறக்கப்பட்டுள்ளது. இந்த நாள் என் வாழ்க்கையில் ஒரு பொன்னாள்.

குன்னம் சட்டமன்ற தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி. முழுவதும் கிராமங்கள் நிறைந்த பகுதி. இந்தத் தொகுதி முன்னேறுவதற்கு வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் என்னென்ன பணிகள் மேற்கொள்ள வேண்டும் என திட்டமிட்டு பல்வேறு பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மக்களோடு நெருக்கமாக பணியாற்றுகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களோடு முன்னேறிச் செல்லும் நோக்கத்தில் அமைச்சர் பெருமக்களும் பயணம் செய்கிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி என்பது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் குன்னம் சட்டமன்ற தொகுதியிலும் அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கும் வகையில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

அதனைத் தொடர்ந்து பணி காலத்தில் இறந்த பணியாளர்களின் 40 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், 25 ஆண்டுகள் 10 ஆண்டுகளுக்கு மேல் விபத்தில்லா பேருந்து இயக்கம் செய்த 29 ஓட்டுநர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களையும் வழங்கிய போக்குவரத்துத் துறை அமைச்சர் 10 புதிய பேருந்து வசதிகளையும் தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட ஆட்சியர் க.கற்பகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.ஷ்யாம்ளாதேவி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன் (பெரம்பலூர்), கு.சின்னப்பா (அரியலூர்), கா.சொ.க.கண்ணன் (ஜெயங்கொண்டம்), மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, சார் ஆட்சியர் சு.கோகுல், மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன்,

ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி (ஆலத்தூர்), மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), ஒன்றிய செயலாளர்கள் தி.மதியழகன், சி. ராஜேந்திரன், பேரூராட்சி தலைவர்கள் ஏஎஸ். ஜாஹிர் உசேன் (லெப்பைக்குடிக்காடு), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மருத்துவர் அ.கருணாநிதி, சாலை போக்குவரத்து நிறுவன உதவி இயக்குநர் (சென்னை) ச.சக்திவேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக திருச்சி மண்டல பொது மேலாளர் அ.முத்துகிருஷ்ணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்(லிட்) பெரம்பலூர் கோட்ட மேலாளர் ராமநாதன், குன்னம் வட்டாட்சியர் கோவிந்தம்மாள், குன்னம் ஊராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி மதியழகன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகம். கலைஞர் மாளிகையில் நாடாளுமன்ற தேர்தலை யொட்டி, வார் ரூமை கழக வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என்.ஆர். இளங்கோ. எம்.பி. குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஜி. கே.சுபரசு, பொருளாளரும் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மு. கார்த்திகேயன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சி. ராஜேந்திரன், கே.டி.மணி, மாநில வழக்கறிஞர் அணி இணைச் செயலானை' ரவிச்சந்திரன், ஜி. குமரவேல், மாநகர செயலாளர் பா. ரகுபதி, தொ. மு. ச தலைவர் வி மணி மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ராம் பிரகாஷ், மாநகர அமைப்பாளர் சீனிவாசன், துரைராஜ், பழனி முருகன், வஸ்தாத் கிருஷ்ணன், விஜயகுமார், நாகராஜ் குப்புசாமி, தமிழரசன், யுவராஜ் உட்பட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் நகராட்சிப் பூங்காவில்

# "எல்லோருக்கும் எல்லாம்" என்ற அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்து பார்வையிட்டார்!

நாமக்கல், மார்ச் 18-

நாமக்கல் நகராட்சி பூங்கா சாலையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், அமைக்கப்பட்டிருந்த "எல்லோருக்கும் எல்லாம்" என்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்", ஏழை, எளிய பெண்களின் உயர்கல்வியை ஊக்குவித்து உறுதி செய்திடும் "புதுமைப் பெண் திட்டம்", உலகை வெல்லும் இளைய தமிழகத்தை உருவாக்கிட கல்லூரிப் படிப்புடன் வேலைவாய்ப்புக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கிடும் "நான் முதல்வன் திட்டம்", பள்ளி செல்லும் குழந்தைகள் களைப்பின்றி பயில "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்", பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் செய்திட "விடியல் பயணம் திட்டம்", மாநிலம் முழுவதும் வேறு மாவட்டங்களிலிருந்து வந்து நகரங்களில் தங்கி பணிபுரியும் பெண்களின் நலன் மற்றும் பாதுகாப்பிற்காகத் "தோழி" தங்கும் விடுதிகள், போன்ற பல்வேறு திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இது போன்ற மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் உரியவர்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்யும் நோக்குடன், மக்கள் மற்றும் அரசுக்கிடையேயான இடைவெளியைக் குறைத்திடும் வகையில், "மக்களுடன் முதல்வர்", "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" "நீங்கள் நலமா" உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

மேற்படி "எல்லோருக்கும் எல்லாம்" என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்ற அரசு நிகழ்ச்சிகள், அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்கள் குறித்து பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் 150 க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் அடங்கிய அரசின் சாதனை விளக்கப் புகைப்படக்கண் காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அரசின் சாதனை விளக்கப்புகைப்படக்கண் காட்சி தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை வரை 7 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தே. ராம்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) த.வடிவேல், நாமக்கல் தெற்கு நகர கழகச் செயலாளர் ராணா ஆனந்த் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி புதுச்சேரி நகராட்சிக்குட்பட்ட கொம்பாக்கம் வார்டில் கொம்பாக்கம் பிள்ளையார் கோயில் வீதி, பாலாஜி நகர் கார்னர் முதல் சுடுகாட்டு சாலை முடியும் வரை பொதுப்பணித்துறை மத்திய கோட்டம் மூலம் ரூ. 2 கோடியே 17 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக தார்ச்சாலை அமைக்கும் பணி, சுடுகாட்டு சாலையின் இருபுறமும் சிமெண்ட் மதில் சுவர் அமைக்கும் பணி மற்றும் கொம்பாக்கம் அம்மன் குளம் முதல் நெசவாளர் நகர் வரை ரூ. 48 லட்சத்து 54 ஆயிரம் மதிப்பீட்டில் தார்ச்சாலை என ரூ. 2 கோடியே 65 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் சாலை அமைக்கும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி இன்று காலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்ப்புச் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்துகொண்டு தார்ச்சாலை அமைக்கும் பணியினை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் - மூங்கில்துறைப்பட்டு தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே

# ரூபாய் 8 கோடி மதிப்பில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகள்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

கள்ளக்குறிச்சி மூங்கில்துறைப்பட்டு மார்ச் 18.

தமிழ்நாடு முதல மைச்சர், கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில் கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களின் 25 ஆண்டு கோரிக்கையை நிறைவேற்றும் வகையில்

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், மூங்கில்துறைப்பட்டு ஊராட்சி கள்ளக்குறிச்சி சங்கராபுரம்_ திருவண்ணாமலை சாலையில் அமைந்துள்ள தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, ரூபாய் 8 கோடி மதிப்பில் புதிய உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசுகையில், கள்ளக்குறிச்சியில் இருந்து சங்கராபுரம் வழியாக திருவண்ணாமலை செல்லும் பொதுமக்கள் மற்றும் அனைத்து விதமான வாகன ஓட்டிகள் பண்டிகை காலம் மற்றும் கோவில் திருவிழாக்கள், முகூர்த்த நாட்களில் போக்குவரத்து நெரிசலால் அவதிப்பட்டு வந்த நிலையில் கடந்த 25 வருட காலமாக இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்து வந்த நிலையில் தற்பொழுது கள்ளக்குறிச்சி - சங்கராபுரம் - திருவண்ணாமலை இருவழிச் சாலை நான்கு வழி சாலையாக விரிவுப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இது கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களின் 25 ஆண்டு கால கோரிக்கை மட்டுமல்ல பெரும் கனவு திட்டமாகும்.

அதனை நிறைவேற்றும் வகையில் முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சுமார் 176 கோடி ரூபாய் மதிப்பில் கள்ளக்குறிச்சி மாவட்ட பொறுப்பு அமைச்சர், பொதுபணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கடந்த மாதம் இந்த திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். மேலும் நான்கு வழி சாலையால் இந்த பகுதியில் செல்லும் பொதுமக்கள் மற்றும் அனைத்து விதமான வாகன ஓட்டிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். ஒரு பகுதியில் சாலை வசதி மிகச் சிறப்பாக இருந்தால் தான் அந்தப் பகுதி வளர்ச்சி அடையும் என்று பேசினார்.

இந்த நிகழ்வில் கோட்ட பொறியாளர் நாகராஜன், துணைக்கோட்ட பொறியாளர்சிவசுப்பிரமணியன், உதவி செயல் பொறியாளர்கள் ஷர்மா, மணிவண்ணன், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய துணை தலைவர் அஞ்சலை கோவிந்தன், மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் விஜய் ஆனந்த், ஊராட்சி மன்ற தலைவர் பரமசிவம் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளாட்சித் பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட ஒன்றிய கிளைக் கழக தி.மு.க. நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட, மாநகர கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் ஈரோடு திண்டலில் செயல்படும் வெங்கடேஸ்வரா குழந்தைகள் காப்பகத்தில் மாவட்ட அமைப்பாளர் அயூப் தலைமையில் நல உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் எம்.கந்தசாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மாவட்ட நிர்வாகிகள் க.சின்னையன், டி.எஸ்.குமாரசாமி, துணை மேயர் வெ.செல்வராஜ், பகுதி கழக செயலாளர் அக்னிசந்துரு, பொதுக்குழு உறுப்பினர்கள் பூபதி, மரவாபாளையம் ராஜு, மாநகர நிர்வாகிகள் இரா .சேகரன், விமல் ( ஏ) நந்தகுமார், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் எஸ்.வி.சங்கர், மாவட்ட மாநகர சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை கே.டி. கூடலரசன்

### மார்ச் 18 (1999)



பள்ளிப் பருவத்திலேயே தி.மு.கழகப் பேச்சாளராக விளங்கியவர்.

இவர் அரசுப் பணியில் இருந்துகொண்டே கழகப் பிரச்சாரத்தை மேற்கொண்டதால், அன்றைய அரசால் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர். அப்படி நீக்கிய பின்னரும், அதற்காக வருந்தாது, மேலும் எழுச்சியுடன் கழக மேடைகள் தோறும் கொள்கை முரசம் செய்தவர்.

முரசொலி உள்ளிட்ட பல பத்திரிகைகளில் கட்டுரை எழுதி பெயர் பெற்றவர்.

தொ.மு.ச. அமைப்பில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தொழிலாளர்களின் நலன் காக்க பாடுபட்ட இவர், சாலை விபத்தில் மரணமடைந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**